உதவி இயக்குனர் / உறுப்பினர் செயலர், கும்பகோணம் உள்ளூர் திட்டக் குழுமம்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம்.
அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.R.நாகேஸ்வரன், பி.இ.,

ந.க.எண்.1386/2020தமா4

நாள். 3.8.2020.

பொருள்: தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம் - திருச்சிராப்பள்ளி கோட்டம் - தஞ்சாவூர் மாவட்டம் - கும்பகோணம் வட்டம் - கும்பகோணம் உள்ளூர் திட்டப்பகுதி – கும்பகோணம் நகராட்சி – வார்டு-6, பிளாக்-10, நகரளவு எண்.574/1- ல் அமையும் 8775.00 சமீ மனையிடத்தில் தரைத்தளம் + மூன்று தளங்களுடன் கூடிய பிளாக்-A-ல் 7ம், பிளாக்-B-ல் 2ம் சேர்த்து 9 பிளாக்குகளில் மொத்தம் 320 குடியிருப்புகள் கொண்ட பல குடியிருப்பு தொகுப்பு கட்டிடம் கட்ட நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49-ன் கீழ் திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது – குறித்து.

பார்வை:-

1. செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருச்சிராப்பள்ளி பிரிவு அவர்களின் கடிதம் ந.க.எண்.194/JE(P) /2019 நாள்.25.01.2019, 20.07.2020, 29.07.2020, 31.07.2020 மற்றும் ந.க.எண்.979/அ1 /2019 நாள்.17.03.2020
2. அரசாணை(நிலை)எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 04.02.2019
3. தமிழ்நாடு அரசிதழ் பிரசுரம் எண்.43, பாகம்-III பிரிவு 1(a) நாள். 04.02.2019
4. உறுப்பினர் செயலர் (பொ), கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.101/2020 குஉதிகு நாள்.16.02.2020
5. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 4367/2019/பி2 நாள்: 5.2.2020
6. இவ்வலுவலக கடிதம் இதே எண். நாள்.27.07.2020

---

உத்தரவு:-

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் ,கும்பகோணம் உள்ளூர் திட்டப்பகுதி, கும்பகோணம் நகராட்சி, வார்டு-6, பிளாக்-10, நகரளவு எண்.574/1- ல் அமையும் 8775.00 சமீ மனையிடத்தில் தரைத்தளம் + மூன்று தளங்களுடன் கூடிய பிளாக்-A-ல் 7ம், பிளாக்-B-ல் 2ம் சேர்த்து 9 பிளாக்குகளில் மொத்தம் 320 குடியிருப்புகள் கொண்ட பல குடியிருப்பு தொகுப்பு கட்டிடம் கட்ட உத்தேச மனையிடத்திற்கு 'ABCDEFGHIJKLMN' என எல்லையிட்டு அம்மனை வரைபடத்திற்கு ம.வ./ந.ஊ.து.இ.(குஉதிகு)எண். 03/2020 என எண்ணிடப்பட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்

உத்தேச தொகுப்பு கட்டிடம் (Block A & B)
பிளாக் A-ல் 7 (A1 –A7 பிளாக்குகள்)
பிளாக் A-ல் 2 (B1-B2 பிளாக்குகள்)

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

Scanned with CamScanner

| கட்டுமான விவரம் | கட்டுமானத்தின் பரப்பளவு | | | | | மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | தரைத்தளம் | முதல் தளம் | 2-ம் தளம் | 3-ம் தளம் | மொத்த பரப்பு | |
| **A1–A7** பிளாக்குகள் | 2100.49 ச.மீ | 2100.49 ச.மீ | 2100.49 ச.மீ | 2100.49 ச.மீ | 8401.96 ச.மீ | 32 X 7 = 224 |
| **B1–B2** பிளாக்குகள் | 882.52 ச.மீ | 882.52 ச.மீ | 882.52 ச.மீ | 882.52 ச.மீ | 3530.08 ச.மீ | 48 X 2 = 96 |
| மொத்தம் | 2983.81 ச.மீ | 2983.81 ச.மீ | 2983.81 ச.மீ | 2983.81 ச.மீ | 11932.04 ச.மீ | 320 |

மேற்கண்ட பரப்பளவுடன் கூடிய உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டிடத்திற்கு கீழ்க்காணும் சிறப்பு நிபந்தனைகள்/நிபந்தனைகளுடன் கட்டிட வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண்.04/2020 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி அளிக்கப்படுகிறது.

சிறப்பு நிபந்தனைகள்:-

1.இட அமைப்பு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள **OSR** ஒதுக்கீட்டிற்கான 877.84 சமீ இடத்தினை கட்டிடப் பணி முடிவுற்ற பின்னர் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய வேண்டும். தானபத்திர நகலினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

2.உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு தொழில்நுட்ப அனுமதி மட்டுமே நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்படுகிறது. கட்டிட உறுதித் தன்மை குறித்து நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் கீழ் எவ்வித விதிகளோ நெறிமுறைகளோ வகுக்கப்படவில்லை. திட்ட அனுமதி வழங்கப்பட்ட உத்தேச கட்டுமானத்தின் உறுதித்தன்மைக்கு கட்டிட உரிமைதாரர்கள், சம்மந்தப்பட்ட பொறியாளர்/ கட்டிட கலை வல்லுநர், உரிமம் பெற்ற அளவையாளர் மற்றும் ஒப்பந்ததாரர்களே பொறுப்பு ஆவர்.

**3.It is responsibility of the builders to ensure safe bearing capacity of the soil and adequacy of the foundations.**

4.'நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பத்தாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி / கட்டிட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்தாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில்(கிரையப பத்திரம் மற்றும் பட்டா, மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

'சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சாத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

**5.This Order is passed subject to the outcome of the writ petition WP(MD) No.8948 of 2019"**

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

Scanned with CamScanner

6.மனையிடத்தின் ஊடே செல்லும் உயர் மின் அழுத்த கம்பி பாதையினை உத்தேச சாலையின் போக்கில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு Solar Water Heating system அமைக்கப்பட வேண்டும்.

2.வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுள்ளதாகவே பயன்படுத்தப்பட வேண்டும்.

3.மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.

4.தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன்அனுமதி பெறப்பட வேண்டும்.

5.மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

6. கட்டி முடிக்கப்பட்ட மற்றும் கூடுதல் உத்தேசம் கொண்ட கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும்,உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்.

7.மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.

8. உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டுமானத்திற்கு விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

9.அரசாணை எண்.341 ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை நாள்.03.11.2004-ன் படி செப்டிக் டேங்க்கில் **"U" Trap** அமைத்தல் வேண்டும்.

10.சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின் படி உத்தேச கட்டிடத்திற்கு **FLY ASH BRICKS & Materials** பயன்படுத்தப்பட வேண்டும்.

11.அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் ( உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12.உத்தேசம் குறித்து கழிவுநீர் வெளியேற்றுதல் தொடர்பாக தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய சட்டம் 1974 பிரிவு 25(**Water Act**) –ன்படி மேற்படி வாரிய இணக்கம் பெறப்பட வேண்டும்.

**EXECUTIVE ENGINEER**
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION

13.அரசாணை நிலை எண்.17 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.15.2.2016-ன் படி **Solar Panel** பொருத்துவது தொடர்பான நடைமுறைகள் பின்பற்றப்பட வெண்டும்.

14.உத்தேச மனையிடத்தில் கட்டுமானம் நடைபெறும் சமயம் பொது மக்களுக்கு இடையூறு ஏதும் ஏற்படாத வண்ணம் கட்டுமானம் பகுதியினை சுற்றி பாதுகாப்பு அரண் அமைத்து கண்காணிக்கப்பட வேண்டும்.

மேற்காண் உத்தேச பல குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டிடத்திற்கு பார்வை 5ல் கண்டுள்ள நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி நன்னிலை வரியாக தொகை ரூ.33,000/- (ருபாய் முப்பத்து மூன்றாயிரம் மட்டும்) அரசு கணக்கில் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. அபிவிருத்தி கட்டணமாகரூ.79,000/- (ருபாய் எழுப்பத்து ஒன்பதாயிரம் மட்டும்) கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியில் கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழும சேமிப்பு கணக்கு எண்.200060052-ல் அதன் அசல் செலுத்து சீட்டுகள் பெறப்பட்டுள்ளது.

முத்திரையிடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. திட்ட அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகைச் சான்றினை அனுப்பிவைக்கும்படி ஆணையர், கும்பகோணம் நகராட்சி அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், திருச்சிராப்பள்ளி பிரிவு அவர்கள் கட்டிட அனுமதி பெற ஆணையர், கும்பகோணம் நகராட்சி அவர்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

உதவி இயக்குனர் / உறுப்பினர் செயலர்,
கும்பகோணம் உள்ளூர் திட்டக் குழுமம்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

இணைப்பு:-
முத்திரையிடப்பட்ட வரைபடம் -2 தொகுப்பு

பெறுநர்:-
ஆணையர்
கும்பகோணம் நகராட்சி ,
கும்பகேணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம். – உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் 2 தொகுப்பு **(2X2)**

நகல்:-
1. செயற்பொறியாளர்
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்,
திருச்சிராப்பள்ளி பிரிவு
மதுரை ரோடு, பாலக்கரை,
திருச்சிராப்பள்ளி-8. – உத்தரவு கடிதம் மட்டும்

2.தொழில்நுட்ப வைப்பறை. – உத்தரவு கடிதம் மற்றும் வரைபடம்

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION.

# கும்பகோணம் நகராட்சி

## கட்டிட அனுமதி உத்திரவு

க.வி.எண்: 105/CP /20-21/000660 ந.க.எண். 7124/2020/டி1 நாள் : 13. 10. 2020

பொருள் : கட்டிட அனுமதி - கும்பகோணம் நகராட்சி - நகரளவு எண்.574/1 தொகுதி06- பிளாக்.10, கட்டிட அனுமதி வழங்கி உத்திரவிடுதல் - சம்மந்தமாக.

பார்வை :
1. செயற்பொறியாளர்,தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், திருச்சிராப்பள்ளி என்பவரது 09,09,2020ம் தேதிய விண்ணப்பம்
2. உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர், கும்பகோணம் உள்ளூர் திட்டக் குழும்ம், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.1386/20/தமா4, நாள்.03.08.2020.

* * * * *

மனையின் பரப்பளவு : 8775 ச.மீ

கட்டிடத்தின் பரப்பளவு: தரை தளம்,2983.81 ச.மீ முதல் தளம்2983.83 ச.மீ, இரண்டாம் தளம்.2983.83 ச.மீ, மூன்றாவது தளம் 298,.83 ச.மீ வரை மொத்த பரப்பளவு 11932.04 ச,மீ

செலுத்தப்பட்ட கட்டணங்களின் விபரம் பின் வருமாறு:

| | தொகை ரூ. | பற்றுச் சீட்டு எண். | நாள். |
|---|---|---|---|
| கட்டிட உரிமையாணைக் கட்டணம் | 7,27,500 | 105/02/1/20-21/0002681 | 06.10.2020 |
| பாதாள சாக்கடை முன்வைப்புத்தொகை | 16,00,000 | 105/02/1/20-21/0002681 | 06.10.2020 |

உத்திரவு:

1920-ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 200, 201-வது பிரிவின் கீழ் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள ஏ.ஆர்.ஆர்.காலனி, தொகுதி.06, பிளாக்.10, நகரளவு எண்.574/1 -ல் அமையும் 8775 ச,மீ மனையிடத்தில் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு A1 - A7 பிளாக் B1 மற்றும் B2 தரைத்தளம் + 3 தளத்துடன் கூடிய 320 குடியிருப்புகள் கொண்ட குடிசைமாற்று வாரியம் குடியிருப்பு கட்டிடம் கட்ட கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின் ஒரு தொகுப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

கட்டிட உரிமைக்காலம் : 13.10.2020 முதல் 02.08.2025 வரை

13.10.20

ஆணையாளர்,
கும்பகோணம் நகராட்சி.

13.10.20

பெறுவர் :

செயற்பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
திருச்சிராப்பள்ளி கோட்டம், மதுரை ரோடு,
பாலக்கரை, திருச்சி -08.

நகல்:நகரமைப்பு ஆய்வர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை தெரிவிக்க

நகல்:வருவாய் ஆய்வாளர் - கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர் கட்டிடத்திற்கு வரிவிதித்து வரி விதிப்பு எண்ணை தெரிவிக்க

நகல்: வருவாய் பிரிவு எழுத்தர்.

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION

Scanned with CamScanner

CONDITIONS/நிபந்தனைகள்

| S.No | Condition Name |
|---|---|
| 1 | இந்த அனுமதி 5 வருட காலத்திற்கு மட்டும் அமுலில் இருக்கும் இந்த கால அளவிற்குள் கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லையானால் புதியதாக மனு உரிமக் கட்டணம் செலுத்தி அனுமதி பெறப்பட வேண்டும் |
| 2 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படி கட்டிடம் கட்டப்பட வேண்டும் |
| 3 | ஆணையாளரிடமிருந்து எழுத்து மூலமான அனுமதி பெறாமல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து எந்தவிதமான மாறுதலும் செய்ய கூடாது |
| 4 | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களை கட்டிட வேலைகள் நடக்கும் இடத்தில் வைத்திருந்து நகராட்சி/மாநகராட்சி ஆய்வு அலுவலர்கள் கேட்கும் போது காண்பிக்கப்பட வேண்டும் |
| 5 | பொதுத் தெருவை ஒட்டிக் கட்டப்படும் மதில் சுவர்களின் உயரம், தெரு மட்டத்திலிருந்து 5/6 அடிக்கு மேற்படக் கூடாது கதவுகள் தெருப் பக்கம் திறக்கப்படக் கூடாது தெருக்களின் சந்திப்பிலுள்ள முனைகள் வளைவுபடுத்த வேண்டும் |
| 6 | சாலை ஓரங்களில் ஆக்கிரமிப்பு செய்தல் கூடாது மனுதாரரின் மனைக்கு செல்வதற்காக கட்டப்படும் படிகள் அவர்கள் சொந்த இடத்திலேயே கட்டப்பட வேண்டும் |
| 7 | அரசு அல்லது நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்தல் கூடாது. |
| 8 | அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி 1) துறை நாள் 03.11.2004ன்படி செப்டிக் டேங்கில் U Trap அமைக்கப்பட வேண்டும். |
| 9. | கிணற்றை சுற்றிலும் 3 அடி உயரத்திற்கு குறையாமல் கைப்பிடிச் சுவர் கட்டப்படுவதுடன் கிணற்றை சுற்றி தளவரிசை கட்டப்பட வேண்டும் |
| 10. | ஜன்னல்களின் அளவுகள் அதன் பிரேம்கள் நீங்கலாக இருக்க வேண்டும். |
| 11. | கழிவுநீரைப் வெளிப்படுத்த தேவையான வடிகால் வசதிகள் கட்டப்படுவதுடன் தண்ணீர் தங்காமல் தடுக்கப்பட வேண்டும் |
| 12 | சமையலறையில் புகையினை வெளியேற்றும் விசிறி (Exhaust Fan) அமைக்கப்பட வேண்டும். |
| 13. | நகராட்சி/மாநகராட்சி துப்புரவு அலுவலர்/ ஆய்வரிடமிருந்து துப்புரவு சான்றிதழ் பெறு முன்னர் கட்டிடத்தை பயன்படுத்துதல் கூடாது |
| 14. | கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதி அல்லது கட்டிடம் பயன்படுத்துகிற தேதி ஆகியவற்றில் எது முன்கூட்டி நடந்ததோ அந்த தேதியை கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட அல்லது கட்டிடம் பயன்படுத்தப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் முடிக்கப்பட்ட கட்டிடத்தின் இரண்டு வரைபடங்களுடன் நிர்வாக அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும் |
| 15. | மழைநீர் சேகரிப்பு திட்டம் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை (நிலை) எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.11.10.2002ன்படி அமைக்கப்பட வேண்டும். |
| 16. | வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் |
| 17. | கட்டிடம் கட்டப்படும் இடத்தின் முன்புறம் கட்டிட உரிமையாளர் பெயர் கட்டிட அனுமதி எண்.அனுமதி வழங்கிய தேதி அனுமதிக்கப்பட்டுள்ள காலம் அனுமதி நீடிப்பு காலம் கட்டிடம் கட்டும் ஒப்பந்ததாரர் பெயர் ஆகிய விபரங்களை வெள்ளை நிற எழுத்தால் எழுதி வைக்கப்பட வேண்டும். |
| 18. | அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதல் செய்து கட்டப்படும் கட்டிடங்களுக்கு/அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்குமாநகராட்சி சட்டப்பிரிவு 283ன்படி அரையாண்டு ஒன்றுக்கு 100 சதுர அடிக்கு ரூ.50 வீதம் வசூலிக்கப்படத்தக்கதாகும். |
| 19. | அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறுதான் கட்டிடம் கட்டப்பட வேண்டும். மாறுதலாகவும், விதிகளுக்கு முரணாகவும் கட்டும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்க இயலாது. மேலும், தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் கட்டிடத்தினை பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 20. | அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களுக்கு மாறுதல் செய்ய அவசியம் எனில் அதற்காக திருத்திய வரைபடங்கள் அனுப்பி புது உத்திரவு பெற்ற பின்னரே கட்டிட வேலை ஆரம்பிக்க வேண்டும். இதில் தவறியவர்கள் மீது மாநகராட்சி சட்டப்பிரிவு 447ன்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் அல்லது மாநகராட்சி சட்டப்பிரிவு 296ன் படி மாநகராட்சி பணியாளர்களால் இடித்து தள்ளப்படும். |
| 21. | ஏற்கனவே உள்ள வீடுகள் மாற்றி கட்டுவதற்கு முன் மின் இணைப்புகள் இருப்பின் அதை அப்புறப்படுத்த வேண்டும். |
| 22. | கட்டிட சம்மந்தப்பட்ட கல், மண் முதலியவற்றை தெருவில் போடக்கூடாது |
| 23. | கட்டிடப்பணி நடைபெறும் பொழுது பணி செய்யும் வேலையாட்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் பாதுகாப்பு குறித்து முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மனுதாரர் சொந்த பொறுப்பில் மேற்கொள்ள வேண்டும் |
| 24. | கட்டுமானப் பொருட்கள் தரம், கட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு பணி மேற்கொள்ளும் பொறியாளரும் கட்டிட உரிமையாளரும் பொறுப்பாவார்கள். |

EXECUTIVE ENGINEER
SLUM CLEARANCE BOARD
TRICHY DIVISION

Scanned with CamScanner